ஸ்ரீ:

# திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

இயற்றிய

# நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி

## சோழநாட்டுத்திருப்பதிகள் --40

### 1. திருவரங்கம் பெரிய கோயில்

ஸ்ரீரங்கநாதன் --ஸ்ரீரங்கநாச்சியார்

சீர்வந்த வுந்தித் திசைமுகனாலல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ --வார்வ
மொரு வரங்கங் கோயிலுகந்தவரை யாள்வான்
திருவரங்கங் கோயிற்சிறப்பு.

### 2. திருநறையூர்

அழகியமணவாளன் --வாஸலக்ஷ்மி

சிறப்புடைய செல்வத்திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்து --ளுறப்போந்
தறந்தையா நின்றவரங்கா திருவா
முறந்தையா யிங்குறைந்ததோது.

### 3.தஞ்சை மாமணிகோயில்
(தஞ்சை வெண்ணாற்றங்கரை)

நீலமேகப்பெருமாள் --செங்கமலவல்லி

ஓதகேணெஞ்சே யுனக்குமிது நன் றெனக்கு
மேதக்க நன்மையினி வேறில்லை -- போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணிவடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.

### 4. திருவன்பில்

திருவடிவழகிய நம்பி --அழகியவல்லி நாச்சியார்

போற்றி செயவோர் குடைக்கீழ்ப் பொன்னாடுமிந்நாடு
நாற்றிசையுமாண்டா லுநன்கில்லை -- தோற்றமிலா
வெந்தையன் பிலாதியிணைத் தாமரையடிக்கே
சிந்தை யன்பிலா தார்சிலர்.

5. திருக்கரம்பனூர்(உத்தமர் கோவில்)
புருஷோத்தமன் --பூர்வாதேவி

சிலமாதவஞ் செய்தும் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்து --மூலகிற்
பரம்ப நூல்கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூருத்தமன் பேர் கல்.

6. திருவெள்ளறை
புண்டரீகாக்ஷன் --பங்கயச்செல்வி

கல்லிருந்தான் றந்தை கமலத்தோனக் கமலத்
தில்லிருந்தான் றந்தையரங்கேசனென்றே --தொல்லைமறை
யுள்ளறையா நின்றமை யாலுள்ளமே கள்ளமின்றி
வெள்ளறை யான்றாளே விரும்பு.

7. திருப்புள்ளம்பூதங்குடி
வல்லிராமன் -- பொற்றாமரையாள்
விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரு
மரும்பரம வீடுமடைவீர் --பெரும்பொறிகொள்
கள்ளம் பூதங்குடி கொள் காயமுடையீ ரடிகள்
புள்ளம் பூதங்குடியிற் போம்.

8. திருப்பேர்நகர்
அப்பக்குடத்தான் -- கமலவல்லித்தாயார்

போமானை யெய்து பொருமானைக் கொம்பு பறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானைத் --தாமச்
செழுந்திருப் பேரானைச் சிறுகாலை சிந்தித்
தெழுந்திருப் போற்குண்டோ விடர்.

10. திருவழுந்தூர்.

ஆமருவியப்பன் --செங்கமலவல்லித்தாயார்

அடியாராய் வாழ்மி நறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத்துந்தீரு --முடிவிற்
செழுந் தூரத் தன்னெனினுஞ் செங்கண்மாலெங்க
ளழுந்தூரத் தன்னணியனாம்.

## 11. திருச்சிறுபுலியூர்
அருள்மாகடல் -- திருமாமகள் நாச்சியார்

ஆமருவி மேய்த்த வரங்கரெதிரார் நிற்பார்
தாமருவி வாணனைத் தோள்சாய்த்த நாள் --சேம
முறுபுலியூர் வன்றோன்றலுடையானுடைந்தான்
சிறுபுலி யூரெந்தை மேற்சென்று.

## 12. திருச்சேறை
ஸாரநாதன் --ஸாரநாயகி

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார்வாயி றொறு
நின்றுநின்று தூங்கு மடநெஞ்சமே -- யின்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன் பேர் செப்பு.

## 13. திருத்தலைச்சங்கநாண்மதியம்
நாண்மதியப்பெருமாள் -- தலைச்சங்க நாச்சியார்

செப்புங் காலாதவனுந் திங்களும் வானுந்தரையு
மப்புங் காலுங் கனலுமாய் நின்றான் ---கைப்பா
லலைச் சங்கமேந்து மணியரங்கத்தம்மான்
றலைச்சங்க நாண்மதியத்தான்.

## 14. திருக்குடந்தை
சார்ங்கபாணிப்பெருமாள், ஆராவமுதன் -கோமளவல்லி

தானே படைத்துலகைத்தானே யளித்து நீ
தானே யழிக்குந்தளர்ச் சியோ---வானிற்
றிருமகுடந்தைத் தக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெரும் குடந்தைக் கிடந்தாய் பேசு.

## 15. திருக்கண்டியூர்
அரன் சாபந்தீர்த்த பெருமாள் --கமலவல்லி நாச்சியார்

பேச வரிற்றென்ன ரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி --யீசனா
ருண்டியூர் தோறுமுழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புக வென்கை.

## 16. திருவிண்ணகர்
உப்பிலியப்பன் ---பூமிதேவி நாச்சியார்

கையு முரையுங் கருத்து முனக்கேயடிமை
செய்யும்படி நீதிருத்தினா --யையா
திருவிண்ணகராளா சிந்தியிலு மெண்ணேன்
பெரு விண்ணகராளும் பேறு.

!

17. திருக்கண்ணபுரம்
சௌரிராஜன் ---கண்ணபுரநாயகி

பேறுதரினும் பிறப்பிறப்பு நோய் மூப்பு
வேறுதரினும் விடேன் கண்டா ---யேறுநீர்
வண்ணபுரத்தா யென்மனம் புகுந்தாய்வைகுந்தா
கண்ணபுரத்தா யுன்கழல்.

18. திருவாலி திருநகரி.
வயலாலி மணவாளன் --- அம்ருதகடவல்லி

கழன்று போம்வாயு வினைக் கட்டாம நீர்த்த
முழன்று போயாடாம லுய்ந்தே ---னழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றுந்
திருவாலி மாயனையே சேர்ந்து.

19. திருநாகை
சௌந்தர்யராஜன் --சௌந்தர்யவல்லி

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினி
யார்ந்த தற்கோர் கைம்மாறறிகிலேன் --பூந்துவரை
மன்னா கையாழிவலவா வலம்புரியாய்
தென்னாகையா யருளிச்செய்.

20. திருநறையூர்(நாச்சியார்கோவில்)
நம்பி----நம்பிக்கை நாச்சியார்

செய்ய சடையோன் றிசைமுகத்தோன் வானவர்கோ
நைய மறுத்தின்ன மறியாரே --துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன் செவ்வாயோன்
றிருநறையூர் நின்றான் செயல்.

21. திருநந்திபுர விண்ணகரம் (நாதன்கோவில்)
விண்ணகரப்பெருமாள் ஜெகந்நாதன் --செண்பகவல்லி

செயற்கரிய செய்வோமைச் செய்யாம நெஞ்சே
மயக்கு வாரைவர் வலியா --னயக்கலவி
சிந்திபுர விண்ணகரமென்பர் திருச்செங்கண்மா
ணந்திபுர விண்ணகர நாடு.

22. திரு இந்தளூர்
சுகந்தவனநாதன் --சந்திர சாபவிமோசனவல்லி

நாடுதும்வா நெஞ்சமே நாராயணன் பதிகள்
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் --சூடுதும் வா
வீதியிந்தளத்தகிலின் வீசு புகைவாச மெழு
மாதியிந்தளூ ரானடி..

23. திருச்சித்ரகூடம்(சிதம்பரம்)
கோவிந்தராஜன் -புண்டரீகவல்லி

அடியாலுலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே --கொடிதாய
குத்திர கூடங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திர கூடங்கருதிச் செல்.

24.காழிச்சீராமவிண்ணகரம்
தாடாளன் -- மட்டவிழுங்குழலி

செல்லுந் தொருமுயிர்ப்பின் செல்லுமிரு வினையை
வெல்லுமுபாயம் விரும்புவீர் -- தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின் பின் மீளாத
வூராம விண்ணகர முண்டு.

25. திருக்கூடலூர்(ஆடுதுறைப்பெருமாள் கோவில்)
வையங்காத்தபெருமாள் --பத்மாசனவல்லி

உண்டு கேட்டுற்று மோந்துப் பார்க்கு மைவர்க்கே
தொண்டுபடலா மோவுன் றொண்டனேன் --விண்டிலங்கு
மாடலூர் நேமிமுதலைம்படையா யன்புடையாய்
கூடலூரா யிதனைக்கூறு.

26. திருக்கண்ணங்குடி
சியாமளமேனிப்பெருமாள் அரவிந்தவல்லி நாச்சியார்

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ வின்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ -- தேறுகிலே
னெண்ணங்குடி யாயிருந்தானின்றான் கிடந்தான்
கண்ணங்குடியான் கருத்து.

27. திருக்கண்ணமங்கை
பக்தவத்ஸலப்பெருமாள் --அபிஷேகவல்லித்தாயார்

கருத்தினால் வாக்கினானான் மறையுங்காணா
வொருத்தனை நீ நெஞ்சேயுணரிற் --பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கங்
கண்ணமங்கை யூரென்று காண்.

28. திருக்கவித்தலம்
கஜேந்திரவரதர் -ரமாமணிவல்லி

காணியுமில்ல முங்கைப் பொருளுமீன் றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவுஞ் --சேணிற்
புவித்தலத் திலின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் காண்.

29. திருவெள்ளியங்குடி
கோலவில்லிராமன் -- மரகதவல்லி நாச்சியார்

காலளவும் போதாக்கடன் ஞாலத்தோர் கற்ற
நூலளவேயன்றி நுவல்வாரார் --கோலப்
பரு வெள்ளியங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெள்ளியங்குடியான் சீர்.

30. திருமணிமாடக்கோவில்
நந்தாவிளக்குப்பெருமாள் -- புண்டரீகவல்லி

சீரேதருங் கதியிற்சேருகைக்கு நானுன்னை
நேரேவண ங்கினேனெஞ்சேநீ --பாரி
லணிமாடக் கோயிலரங் கனார் நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கு.

31. திருவைகுந்த விண்ணகரம்.
வைகுந்தநாதன் -- வைகுந்தவல்லி

வணங்கேன் பிறதெய்வ மாலடியாரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடே --னிணங்கி நின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவே னீதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு.

32. திருவரிமேய விண்ணகரம்
குடமாடு கூத்தர் -- அம்ருதகடவல்லி

வாழுமடியார் மடநெஞ்சே நம்மளவோ
தாழுஞ்சடையொன் சதுமுகத்தோன் --பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டா
யரிமேய விண்ணகரத்தார்க்கு.

33 திருத்தேவனார் தொகை
தெய்வநாயகப்பெருமாள் -- கடல்மகள் நாச்சியார்

ஆர்க்கும் வலம்புரியாலண்டமு மென்றிசையுங்
கார்க்கடலும் வெற்புங்கலங்கினவாற் --சீர்க்குந்
திருத்தேவனார் தொகைமால் செவ்வாய் வைத்தூதத்
தருத்தேவனார் தொகையுஞ் சாய்ந்து.

34. திருவண்புருடோத்தமம்.
புருஷோத்தமன் -- புருஷோத்தமநாயகி

சாய்ந்த திருவரங்கந் தண்வேங்கடங் குடந்தை
யேய்ந்த திருமாலிருஞ்சோலை -- பூந்துவரை
வண்புருடோத்தமமாம் வானவர்க்கும் வானவனா
மொண்ப்ருடோத்த மன்றனூர்.

35. திருச்செம்பொன்செய் கோயில்
பேரருளாளர் -- அல்லிமாமலர் நாச்சியார்

ஊர்வேன் மடலையொழிவேன் மடநாணஞ்
சேர்வேன் கரியதிருமாலைப்--- பாரறிய
வம்பொன் செய்கோயிலரங்கனணி நாங்கூர்ச்
செம்பொன் செய்கோயிலினிற் சென்று

36. திருத்தெற்றியம்பலம்
செங்கண்மால் --செங்கமலவல்லி

சென்றது காலந் திரைநரை மூப்பான வினி
யென்று கொல் சாவறியொ மென்னெஞ்சே--கன்றா
லுருத்தெற்றியம் பலத்தையோர் விளவின் வீழ்த்தான்
றிருத் தெற்றியம்பலத்தைச் சேர்.

37. திருமணிக்கூடம்
மணிக்கூடநாயகன் -- திருமாமகள் நாச்சியார்

சேராது முன்செய்த தீவினை பின்செய்வதுவும்
வாரா தினிநீ மடனெஞ்சே---நேராக்
குருமணிக் கூடத்தானைக் கொம்பு பறித்தானைத்
திருமணிக் கூடத்தானைச் செப்பு..

38. திருக்காவளம்பாடி
கோபாலகிருஷ்ணன் -- மடவரல்நங்கை

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற்றமிழ் மாலை
கைப்பேன் பிறதெய்வங்காண்பாரை -- யெப்போதுங்
காவளம் பாடித் திருமால் காற்றாமரை தொழுது
நாவளம் பாடித் திரிவேனான்.

39. திருவெள்ளக்குளம்
கண்ணன் --பூவார் திருமகள் நாச்சியார்

நானடிமை செய்யவிடாய் நானானே னெம்பெருமான்
றானடிமை கொள்ளவிடாய் தானானா -- னானதற்பின்
வெள்ளக்குளத்தே விடாயிருவருந் தணிந்தோ
முள்ளக் குளத் தேனையொத்து.

40. திருப்பார்த்தன்பள்ளி
தாமரையாள் கேள்வன் -- தாமரைநாயகி

ஒத்தமா ரேத்து மொளிவி சும்பும் பாற்கடலு
மித்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே --சித்துணர்ந்த
தீர்த்தன் பள்ளிக்கு இருந்து செப்ப வெளிநின்றானைப்
பார்த்தன் பள்ளிக்குட்பணி.

சோழநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

## பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்---18

--------------

1. திருமாலிருஞ்சோலைமலை
அழகர் மாலலங்காரர் -- சுந்தரவல்லி நாச்சியார்

பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளி
லணிந்தே னருட்டஞ்சமாகத் --துணிந்தேன்
றிருமாலிருஞ் சோலைசேர்ந்தே னெனக்கு
வருமாலிருஞ் சோதிவான்.

2. திருக்கோட்டியூர்
சௌம்யநாராயணன் -- திருமாமகள் நாச்சியார்

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீ பார்த்திரங்கினாய் --தேன்பார்ப்பி
னோசைத் திருக்கோட்டியூரானே யின்னமுமென்
னாசைத் திருக்கோட்டியான்.

3. திருமெய்யம்
ஸத்யகிரிநாதன் --உய்யவந்தாள்

ஆளாயுளக்கன் பாயா சையாய் நாணிலியாய்
வாளா மனைவி யென்று வாழ்வேனைக் -- கேளாய்
திருமெய்ய மாயா சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயாமதன்.

4 திருப்புல்லாணி
கல்யாண ஜகந்நாதன் --கல்யாணவல்லி

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையாலி தயங்கரையு --முதலாய
புல்லணிமாலே புறத்தோர் புகழிருப்பு
வல்லாணியேன் செவிக்குமாறு.

5. திருத்தண்கால்
தண்காலப்பன் --அன்னநாயகி

மாறுபட வாடை யெனும் வன்கால் வந்தென் முலைமே
லூறுபட வூர்ந்த வுளைவெல்லா --மாறத்
திருத்தண் காலூ ரான்றிருத்தண்டுழாயின்
மருத்தண் காலூராதோ வாய்ந்து.

6. திருமோகூர்
காளமேகப்பெருமாள் -- திருமோகூர்வல்லி

வாயான் மலர்கோதி வாவி தொறுமேயுமோ
மேயா மலப்பால் விரையுமோ -- மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நாளை
வருமொ கூர்வாயன்னம் வாழ்ந்து.

7. திருக்கூடல் (தென்மதுரை)
கூடலழகர் ---வகுளவல்லி நாச்சியார்

வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையிலின்ன மென்னை
யாழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன் றாழ்விலாப்
பாடலழகார் புதுவைப்பட்டர் பிரான்கொண்டாடுங்
கூடலழகா நின்குறிப்பு.

8. ஸ்ரீவில்லிப்புத்தூர்
வடபத்ரசயனர், ரங்கமன்னார் -- ஆண்டாள், கோதைநாச்சியார்

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ கோதை
நிறத்தவூர் விண்டுசித்தர் நீடூர் -- பிறப்பிலியூர்
தாழ்வில்லிபுத் தூரென்றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர்வளம்.

9. திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)
ஆதிநாதப்பெருமாள் -- ஆதிநாதவல்லி

வளந்தழைக்க வுண்டாலென் வாச மணந்தாலென்
றெளிந்தகலை கற்றாலென் சீசீ-- குளிர்ந்த பொழிற்
றண்குருகூர் வாவிச் சடகோபனு ரெங்கள்
வண்குருகூ ரென்னாதவாய்.

10. திருத்தொலைவில்லிமங்கலம்
தேவபிரான் -- கருந்தடங்கண்ணி

வாயுமனைவியர் பூமங்கையர்க ளெம்பிராற்
காயுதங்களாழி முதலைம் படைக --டூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவமேனி
மலைவில்லி மங்கலந்தவான்.

11. சிரீவரமங்கை (நாங்குனேரி)
வானமாமலைப்பெருமாள், தெய்வநாயகன் --சிரீவரமங்கைநாச்சியார்

வானோர் முதலாமரவளவா வெப்பிறப்பு
மானே ற்கவதி யிடலாகாதோ --தேனேயும்
பூவாமங்கை புவிமங்கை நாயகனே
சீவரமங்கை யரசே.

12. திருப்பேரை
மகர நெடுங்குழைக்காதர் -- குழைக்காதுவல்லி நாச்சியார்

அரைசாகி வையமுழுதாண்டா லுமின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர் --முரைசாருந்
தென்றிருப் பேரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
றன்றிருப் பேரைப்பதியாதார்.

13. ஸ்ரீவைகுந்தம்
கள்ளபிரான் --வைகுந்தவல்லி

தாருடுத்துத் தூசுதலைக் கணியும்பேதையிவ
ணேருடுத்த சிந்தை நிலையறியேன் -- போருடுத்த
பாவைவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத்துழாய் நாடுஞ்
சீவைகுந்தம் பாடுந்தெளிந்து.

14. திருப்புளிங்குடி
காய்சினவேந்தன் --மலர்மகள் நாச்சியார்

தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந்துயர் போய்விடுமே -- யெளியேற்
கருளப் புளிங்குடிவாழச் சுதனைக்கொண்டு
கருளப் புளிங்குவந்தக்கால்.

15. திருவரகுணமங்கை
விஜயாஸனர் -- வரகுணவல்லி

காலமு நோயுங் கருதாதவன்னைமீர்
வேலன்வெறியை விலக்குமின்கண் -- மாலாம்
வரகுணமங்கை யன்றாள் வண்டுழாய் மேலா
தரகுணமங்கை தனக்கு.

16. திருக்குளந்தை(பெருங்குளம்)
மாயக்கூத்தன் --குளந்தைவல்லி

தனக்குடலம் வேறான தன்மையுணரான்
மனக்கவலை தீர்ந்துய்யமாட்டா --னினைக்கிற்
றிருக்குளந்தை யாருரைத்த சீர்க்கீதை பாடுந்
தருக்குளந்தை யாமலிருந்தால்.

17. திருக்குறுங்குடி
வைஷ்ணவ நம்பி --குறுங்குடிவல்லி

தாலத் திழிகுலத்துச் சண்டாள னானாலு
மேலத்த வரதனின் மேன்மைத்தே -- கோலக்
குறுங்குடி வாழ்மாயன் குரைகழற் காளாகப்
பெறுங்குயாய் வாழ்வார் பிறப்பு.

18. திருக்கோளூர்
வைத்தமாநிதி -- கோளூர்வல்லி

பிறப்பற்று மூப்புப்பிணியற்று நாளு
மிறப்பற்று வாழவிருப்பீர் -- புறப்பற்றுத்
தள்ளுங்கோ ளூரரவிற்றாமோதரன் பள்ளி
கொள்ளுங் கோளூர் மருவுங்கோள்.

-----பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் முற்றும்-----

## மலைநாட்டுத்திருப்பதிகள்

1. திருவனந்தபுரம்
அனந்தபத்மநாபன் -- ஸ்ரீஹரிலக்ஷ்மி

கோளார் பொறியைந்துங் குன்றியுடலம்பழுத்து
மாளாமு னெஞ்சே வணங்குதியாற் -- கேளார்
சினந்த புரஞ்சுட்டான் றிசைமுகத்தான் போற்று
மனந்த புரஞ்சேர்ந்தானடி.

2. திருவண்பரிசாரம்
திருக்குறளப்பன் -- கமலவல்லி நாச்சியார்

அடியுங் குளிர்ந்தாளறிவுங் குலைந்தாண்
முடிகின்றாண் மூச்சடங்குமுன்னே -- கடிதோடிப்
பெண் பரிசாரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண் பரிசாரங்கிடந்த மாற்கு

3. திருக்காட்கரை
அப்பன் --பெருஞ்செல்வநாயகி

மார்க்கமுகத்தாம் வழிபடுந்தெய்வமு
மேற்கவுரைப்பார் சொலெண்ணாதே --தோற்குரம்பை
நாட்கரையா முன்னமேநன் னெஞ்சே நாரணனாங்
காட்கரையார் காளாகாய்காண்.

4. திருமூழிக்களம்
திருமூழிக்களத்தான் -- மதுரவேணி நாச்சியார்

காண்கின்ற வைம்பூதங்கட்கு மிருசுடர்க்குஞ்
சேண்கலந்த விந்திரற்குந் தேவர்க்கு -- மாண்கரிய
பாழிக்களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கு
மூழிக்களத்தான் முதல்.

5.திருப்புலியூர் --குட்டநாடு
மாயப்பிரான் --பொற்கொடிநாச்சியார்

முதல் வண்ணமாமேமுலை வண்ணமுன்னே
விதிவண்ண நீங்கிவிடுமே --சதுரத்
திருப்புலியூர் நின்றான்றிருத் தண்டுழாயின்
மருப்புலியூர் தென்றல்வரின்

6. திருச்செங்குன்றூர்
இமையவரப்பன் -- செங்கமலவல்லி

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கிவிக்குள்
பொரவேயுயிர் மாயும்போழ்து -- பரமேட்டி
செங்குன்றூர்மாலே சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன் றூர்கார் போற்பறந்து

7. திருநாவாய்
நாராயணன் -- மலர்மங்கைநாச்சியார்

பறந்துதிரிதரினும் பாவியேனுள்ள
மறந்தும் பிறிதறிய மாட்டா --சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல்லாலென்
நொருநா வாய்வாழ்த் தாது கந்து.

8. திருவல்லவாழ்
கோலப்பிரான்--- செல்வத்திருக்கொழுந்து நாச்சியார்

உகந்தார்க் கெஞ்ஞான்று முளனா யுகவா
திகந்தார்க் கெஞ்ஞான்று மிலனாய் -- திகழ்ந்திட்
டருவல்ல வாழுருவ மல்லவென நின்றான்
றிருவல்ல வாழுறை யுந்தே.

9. திருவண்வண்டூர்
பாம்பணையப்பன் -- கமலவல்லி நாச்சியார்

தேவுமுலகு முயிருந்திரிந்து நிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர் --பூவிற்
றிருவண் வண்டூரையுந் தேவாதி தேவன்
மருவண் வண்டூர் துளவமால்.

10. திருவாட்டாறு
ஆதிகேசவப்பெருமாள் --மரகதவல்லி நாச்சியார்

மாலைமுடி நீத்து மலர்ப்பொன்னடி நோவப்
பாலைவன நீ புகுந்தாய் பண்டென்று --சாலவுநான்
கேட்டாற் றுயிலேன்காண் கேசவனே பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில் கொள்வாய்.

12.திருவித்துவக்கோடு
உய்யவந்தபெருமாள் -- வித்துவக்கோட்டுவல்லி

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே
தோய்த்த தயிர் வெண்ணெய் தொட்டுண்ட --கூத்தன்
றிருவிற்றுவக்கோடு சேர்ந்தாற் பிறவிக்
கருவிற்று வக்கோடுங்காண்

13. திருக்கடித்தானம்
அற்புத நாராயணன் --கற்பகவல்லித்தாயார்

காண விரும்பு மென்கண் கையுந்தொழ விரும்பும்
பூண விரும்பு மென்றன் புன்றலைதான் --வாணன்
றிருக் கடித்தானத் தான்றிரியான் றண்டான்
றிருக் கடித்தானத்தானை சென்று

13. திருவாறன்விளை
திருக்குறளப்பன் --- பத்மாசன நாச்சியார்

சென்றுபுனன் மூழ்கிச் செய்தவங் கள்செய்தாலும்
வென்று புலனைந் தடக்கிவிட்டாலு --மின்றமிழான்
மாறன் விளைத்த மறையோ தார்க்கில்லையே
யாறன் விளைத் திருமாலன்பு.

****** மலைநாட்டுத்திருப்பதிகள் முற்றும் ********

## நடுநாட்டுத்திருப்பதிகள்.

1. திருவயிந்திரபுரம்.
தெய்வநாயகப்பெருமாள் --வைகுண்டநாயகி

அன்பணிந்த சிந்தையராயாய்ந்த மலர்தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே --யென்ப
ரெமையிந்திர புரத்தார்க்கின் றொண்டரானார்
தமையிந்திர புரத்தார்தாம்

2. திருக்கோவலூர்
திரிவிக்கிரமன் --பூங்கோவல் நாச்சியார்

தாமரை யானாதியாய்த் தாவரங்களீறான
சேமவுயிருஞ் செகமனைத்தும் --பூமடந்தைக்
காங் கோவாலாயுதன் பின்னாவவதரித்த
பூங்கோவலாயன் பொருள்.

----------நடுநாட்டுத்திருப்பதிகள் முற்றும்-------------

## தொண்டைநாட்டுத்திருப்பதிகள்---22

1. திருக்கச்சி --அத்திகிரி

பேரருளாளப்பெருமாள்,
வரதராஜப்பெருமாள் --பெருந்தேவித்தாயார்

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித்திராதே--- யருளாளன்
கச்சித்தி ருப்பதியா மத்தியூர்க் கண்ணன்றா
ளிச்சித்திருப்பதியாமென்று.

2. திருஅட்டபுயங்கம்
ஆதிகேசவப்பெருமாள் அலர்மேல்மங்கை

என்றுந் துயருழக்கு மேழைகாணீங் களிளங்
கன்று போற்றுள்ளிக் களித்திரீ--- ரன்றுநட
மிட்டபு யங்கத்திரு சரணமே சரணென்
றட்டபுயங் கத்தற் காளாய்.

3. திருத்தண்கா

விளக்கொளி தீபப்பிரகாசர் --மரகதவல்லித்தாயார்

ஆட்பட்டேனைம் பொறியாலாசைப் பட்டேனறிவுங்

கோட்பட்டு நாணுங்குறைபட்டேன் --சேட்பட்ட

வண்காவை வண்டு வரைவைத்த விளக்கொளிக்குத்

தண்காவைச் சேர்ந்தான் றனக்கு

4. திருவேளுக்கை

அழகியசிங்கர் --வேளுக்கைவல்லி

தனக்குரியனாயமைந்த தானவர்கோன் கெட்டா
னுனக்குரிய னாயமைந்தனுய்ந்தா --னினைக்குங்கால்
வேளுக்கையாளரியே வேறுதிவியுண்டோவுன்
றாளுக்காளாதவர்க்கு.

5. திருப்பாடகம்

பாண்டவதூதர் --ருக்மணிதேவி, சத்தியபாமை

தவம்புரிந்த சேதனரைச் சந்திரனா தித்தன்
சிவன் பிரமனிந்திரனாச் செய்கை --யுவந்து
திருப்பாடக மருவுஞ் செங்கண் மாறன்மார்
பிருப்பாடக வுரையாலே.

6. திருநீரகம்

ஜெகதீசப்பெருமாள் --- நிலமங்கைவல்லி

ஆலத்திலை சேர்ந்தழியு லகையுட்புகுந்த
காலத்தி லெவ்வகை நீகாட்டினாய் --ஞாலத்து
ணீரகத்தாய் நின்னடியே னெஞ்சகத்தாய் நீண்மறையின்
வேரகத்தாய் வேதியற்கு மீண்டு.

7. நிலாத்திங்கள்துண்டம்

நிலாத்திங்கள் துண்டத்தான் ---நேரொருவரில்லாவல்லி

மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூப்
பாண்டரங்கமாடி படர்சடைமேற் --றீண்டிக்
கலாத்திங்கட் டுண்டத்தின் மீதிருப்பக்கண்டு
நிலாத்திங்கள் துண்டத்தானே.

8. திருஊரகம்(உலகளந்த பெருமாள் கோவில்)

உலகளந்தபெருமாள் --அமுதவல்லி நாச்சியார்

நேசத்தாலன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தானென் றலைமேல் வைத்திலையே --னாசத்தாற்
பாரகத்துளன்றி நான்பாழ்நரகில் வீழ்ந்தென்கொ
லூரகத்து ணின்றாயுரை.

9. திருவெஃகா

சொன்னவண்ணம் செய்தபெருமாள்
கோமளவல்லிநாச்சியார்

உரைகலந்த நூலெல்லாமோதி யுணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போற்பிரிதாந் -- தரையிற்
றிடுவெஃகாமாயனுக்கே சீருறவாந்தங்க
ளுருவெஃகாவுள்ளத்தினோர்க்கு

10. திருக்காரகம்

கருணாகரப்பெருமாள் --பத்மாமணிநாச்சியார்

ஓராதார் கல்வியுடையேங் குலமுடையே
மாராதன முடையேம்யாமென்று --சீராயன்
பூங்காரகங் காணப்போதுவார் தாடலைமேற்
றாங்காரகங் காரத்தால்.

11. திருக்கார்வானம்

கள்வர் --கமலவல்லிநாச்சியார்

தாலேலோ வென்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ்வாறு பசியாற்றினண்முன் --மாலேபூங்
கார்வானத் துள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய்நீ பண்டு.

12. திருக்கள்வனூர்

ஆதிவராகப்பெருமாள் -- அஞ்சிலை நாச்சியார்

பண்டேயுண்றொண்டாம் பழவுயிரை யென்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே --மண்டலத்தோர்
புள்வாய்பிளந்த புயலேயுனைக் கச்சிக்
கள்வாவென் றோதுவதென் கண்டு.

13. திருப்பவளவண்ணம்

பவளவண்ணப்பெருமாள் --பவளவல்லி நாச்சியார்

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங்காதலா
லுண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே --பண்டைத்
தவளவண்ணா கார்வண்ணா சாமவண்ணா கச்சிப்
பவளவண்ணா நின்பொற்பதம்.

14. திருப்பரமேச்சுரவிண்ணகரம்
(வைகுண்டப்பெருமாள் சந்நிதி)

பரமபதனாதன் --வைகுந்தவல்லி

பதத் தமிழாற்றன்னையே பாடுவித் தென்னைத்தன்
பதத்தடியாக் கேயாட்படுத்தா --னிதத்த
பரமேச்சுர விண்ணகரான் பலவான்
வரமேச் சுரலணைந்தமால்.

15. திருப்புட்குழி
விஜயராகவப்பெருமாள் ---மரகதவல்லி நாச்சியார்

மால்வேழமு மரவு மாயையும் வெற்புங்கடலு
மேல்வீழ்படையும் விடமும் போய்ப் பால
னெருப்புட் குழிகுளிர நின்றதுங் கேட்டோதார்
திருப்புட் குழியமலன் சீர்

16. திருநின்றவூர்

பக்தவத்ஸலன்(பத்தராவிப்பெருமாள்) --
என்னைப்பெற்ற தாயார்

சீரறிந்து தோழிமீர் சென்று கொணர்ந்தெனக்குப்
போரமுலை முகட்டிற் பூட்டுமினோ --நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னை மாணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர்.

17. திருவெவ்வுளூர் (திருவள்ளூர்)

வீரராகவப்பெருமாள் -- கனகவல்லித்தாயார்.

நீர்மை கெடவைதாரு நின்றோடெதிர்த்தாருஞ்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்க்கையினா -- னேர்மையிலா
வெவ்வுளத்தனேன் செய்மிகையைப் பொறுத்தருளி
யெவ்வுளத்தனே நீயிரங்கு.

18. திருநீர்மலை (சென்னை பல்லாவரம்)

நீலமுகில்வண்ணன் -- அணிமாமலர்மங்கைத்தாயார்

இரங்குமுயிரனைத்து மின்னருளாற் காப்பா
னரங்க னொருவனுமேயாதல் --கரங்களாற்
போர்மலை வான்வந்த புகழ்வாணன் காட்டினா
னீர்மலை வாழெந்தை யெதிர்நின்று.

19. திருவிடவெந்தை

நித்யகல்யாணர் --கோமளவல்லி நாச்சியார்

நின்றுதிரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்றுதிரியுங் கொடுவினையா --ரின்று
வெருவிட வெந்தைக்கே விழுமிய தொண்டானேன்
றிருவிட வெந்தை செறிந்து

20. திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)

தலசயனத்துறைவார் -- நிலமங்கைநாச்சியார்

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச்சாடி
முறிந்துவிழப் பகனையுமோதி -- யெறிந்து
தருக்கடன் மல்லைக்குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே
திருக்கடன் மல்லைக்குட்டிரி.

21. திருவல்லிக்கேணி
வேங்கடகிருஷ்ணன் (பார்த்தசாரதி) --
ருக்மிணிப்பிராட்டி

(தொண்டைமான் சக்கரவர்த்தியின் ப்ரார்த்தனைப்படியே திருவேங்கடமுடையார் கண்ணனாகத்தனது குடும்பத்தோடு சேவை சாதித்த தலம்)
திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வேநிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றான் -- மருந்தாங்
கருவல்லிக் கேணியாமாக்கதிக்குக் கண்ணன்
றிருவல்லிக் கேணியான்சீர்.

22. திருக்கடிகை (சோளசிங்கபுரம்)
யோகநரசிம்மர் -- அமிருதவல்லி நாச்சியார்

சீரருளாளளம்மைத் திருத்திநாமுன்னறியாக்
கூரறிவுந்தந்தடிமை கொண்டதற்கே -- நேரே
யொருகடிகையும் மனமேயுளனாகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான்.

----------தொண்டைநாட்டுத்திருப்பதிகள் முற்றும்-------

## வடநாட்டுத்திருப்பதிகள் -- 12

1. திருவேங்கடம் (திருமலை - திருப்பதி )

திருவேங்கடத்தான் ---அலர்மேல்மங்கைத்தாயார்

தானே சரணமுமாய்த்தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந்தன்மையான் --றேனேய்
திருவேங்கடந் தொழுதேந் தீயவிபூதிக்குண்
மருவேங் கடந்தெனமிவ் வாழ்வு

2. சிங்கவேள்குன்றம் (அஹோபிலம்)

நரசிம்ஹன் -- லக்ஷ்மி நாச்சியார்

வாழ்குமரன் மேற்கனகவஞ்சகன் மேலோர்முகத்தே
சூழ்கருணையும் முனிவுந்தோன்றியவாற் --கேழ்கிளரு
மங்கவேள் குன்றவழல்சர பத்தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தினார்க்கு.

3. திருவயோத்தி
சக்ரவர்த்தித்திருமகன் ரகுநாயகன் - ஸீதாபிராட்டி

ஆர்க்குமிது நன்றுதீ தானாலு நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே --சீர்க்குந்
திருவையோத்திப் புயலைச்சீரிய மெய்ஞ்ஞானத்
துருவையோத்திற் பொருளையோர்.

4. திருநைமிசாரண்யம்
தேவராஜன் -ஸ்ரீஹரிலக்ஷ்மி

ஓரறிவு மில்லாதவென் போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண் டேனும்பிறர்க் கரிது -- பாரறிய
நைம்மிசா ரண்ணியத்து நாதரடியா ரோடு
மிம்மிசார்வுண்டா யினால்.

5. சாளக்கிராமம்
ஸ்ரீமூர்த்திப்பெருமாள் ---ஸ்ரீதேவிநாச்சியார்

உண்டா முறைமையுணர்ந் தடிமைப்பேர் பூண்டேன்
பண்டாங்குடி குலத்தாற் பன்மதத்தாற் --கொண்டாட்டா
லாளக்கிராமத் தாலல்லற்பேர் பூணாமற்
சாளக்கிரா மத்தார் தாட்கு.

6. வதரியாச்சிரமம்
பத்ரீ நாராயணன் --அரவிந்தவல்லி

தாட்கடிமை யென்றுதமையுணரார்க் கெட்டெழுத்துங்
கேட்க வெளியிட்டருளுங் கேசவனை --வேட்கையோடு
போவதரிதானாலும் போய்த்தொழுவோ நெஞ்சமே
மாவதரியாச் சிரமத்து.

7. திருக்கண்டங்கடிநகர் (தேவப்ரயாகை)
நீலமேகப்பெருமாள் - புருஷோத்தமன் -- புண்டரீகவல்லி

மத்தாற் கடல்கடைந்து வனோர்க்கமுதளித்த
வத்தா வெனக்குன்னடிப் போதிற் --புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய் புண்டரீக
மங்கை கரைசேவழங்கு.

8. திருபிருதி (நந்தப்ரயாகை)
பரமபுருஷன் -- பரிமளவல்லி நாச்சியார்

வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்குங்கவந்தன் விறற்றோட் --கிழங்கைப்
பொருப்பிருதிக்குங் கிடந்தாற்போற்றுணிந்து வீழ்ந்தான்
றிருப்பிருதிக் கென்னெஞ்சே சொல்.

9. வடமதுரை (கோவர்த்தனம்)
கோவர்த்தநேசன் --சத்தியபாமை

செல்வ முயிருடம்பு சேரவுரித்தாக்கி
வல்வினை யினீங்குமினோ மாந்தர்கா --டொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்ததஞ்ச மென்று
திடமதுரை செய்தான் றிறத்து.

10. துவாரகை
கல்யாண நாராயணன் --கல்யாண நாச்சியார்.

திறந்திறமாத் தாந்துய்க்குஞ் தீஞ்சுவையை நாடி
யறந்திறம்பிப் பாதகரோரைவர் --நறுந்துளவ
மாதுவரையானே மனந்துணையாக் கொண்டென்னைக்
காதுவரையோமெய் கலந்து.

11. திருஆய்ப்பாடி (கோகுலம்)
நவமோகனக்கிருஷ்ணன் --
ருக்மணிப்பிராட்டி,சத்தியபாமைப்பிராட்டி

கலந்தமர ரோடுங்கரை கண்டாரோடும்
பொலிந்து திருநாட்டிருக்கப் போவீர் --மலிந்தபுக
ழண்டராய்ப் பாடியமலரடியா ரடியார்
தொண்டராய்ப் பாடிட்தொழும்.

12. திருப்பாற்கடல்.

க்ஷீராப்திநாதன், வ்யூகமூர்த்தி, --கடல்மகள் நாச்சியார்

தொழும்பாய நானல்ல சூதறிந்துகொண்டேன்
செழும்பாயலை முத்தஞ்சிந்தி ---- முழங்குந்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தாரடி சேர்ந்
திருப்பாற்கடலா மிடர்.

--------வடநாட்டுத்திருப்பதிகள் முற்றும்.-----------

திருநாட்டுத்திருப்பதி --1

பரமபதம் (நித்ய விபூதி)

பரமபதநாதன் ---- பெரிய பிராட்டியார்

இடருடையேன் சொல்லவெளிதோ பிரம
னடரும் விடையோற்கு மரிதே --தொடருங்
கருவைகுந்தம் பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந்தம் பெறுவார் சீர்.

-----திருநாட்டுத்திருப்பதி முற்றும் -----

மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவு

மெண்ணு திருப்பதினூற் றெட்டினையு -- நண்ணுவார்

கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்

பொற் பாதமென்றலை மேற்பூ.